அரசினர் பாடசாலைக் கல்விச்சேவை

tamilisch

## பாடசாலை பற்றிய தகவல்கள் - பெற்றோருக்கான தொடர்புமையங்கள்

பெற்றோருக்கும் பாடசாலைக்குமிடையிலான நல்ல கூட்டுறவுப்பணியானது, உங்கள் பிள்ளையின் பாடசாலை முற்னேற்றத்துக்கு ஒரு முக்கிய காரணியாகும்.

| விடயம் | தொடர்புமையம் |
|---|---|
| **பொதுவாக பாடசாலை சம்பந்தமாக** | |
| - லுட்சேர்ண் மாநிலத்தில் பாடசாலை நடைமுறை<br>- உங்கள் வதிவிடத்திலுள்ள பாடசாலைகள்<br>- குடும்பச்சூழலை நிறைவு செய்யக் கூடிய பராமரிப்பு வாய்ப்புக்கள்<br>- பாடசாலை வைத்தியர்<br>- பாடசாலைப் பல் வைத்தியர் | பாடசாலைத் தலைமையாசிரியர்/ தலைமையாசிரியை அல்லது பாடசாலைகளுக்கிடையிலான அதிபர் (Rektorat) தகவல்களைத் தருவார்<br>பாடசாலைத் தலைமையாசிரியர் அல்லது பாடசாலைகளுக்கிடையிலான அதிபர்(Rektorat): |
| **வகுப்பும் கற்பித்தலும்** | |
| - வகுப்பு பற்றிய கேள்விகள்<br>- கற்பித்தலும் வீட்டுவேலை சம்பந்தமான கேள்விகளும்<br>- பிள்ளையின் நடத்தைப்பிரச்சினைகளும் கற்றல் பிரச்சினைகளும்<br>- பாடசாலை வீட்டுவேலையில் உதவுதல் | வகுப்பாசிரியர்/வகுப்பாசிரியை தகவல் தருவார். |
| **பாடசாலைச்சேவைகள்** | |
| உங்கள் பிள்ளைக்குப் பிரச்சினைகள் இருக்கும் பட்சத்தில், பாடசாலைச்சேவைகள் ஆதரவு வழங்குகின்றது. இந்த ஆதரவு இலவசமானது.<br><br>- **பாடசாலை உளவியற்பிரிவின் சேவை (SPD)**<br>**கற்றல் பிரச்சினைகள், நடத்தைப் பிரச்சினைகளின்** போது, விளக்கமும் ஆலோசனையும் பெறுவதற்கு<br>- **பேச்சுப்பயிற்சிச் சேவை**<br>**மொழி இடையூறு, பேச்சுத் தடங்கல்** இருக்கும் பட்சத்தில் ஒரு ஆலோசனை பெறுவதற்கு<br>- **உள இயக்கவியல் பயிற்சி மையங்கள்**<br>**நுண்ணிய-, கரடுமுரடானஇயக்கங்களின்** போது **அவதானிக்கத்தக்க வேறுபாடுகளிருந்தால்**<br>- **பாடசாலைச் சமூக நலப்பணி**<br>இது மாணவமாணவிகள், பெற்றோர், ஆசிரியர்களுக்கு பாடசாலை சம்பந்தமான பிரச்சினைகளின் போதும், அவசியத்தேவைகளின் போதும் ஆதரவளிக்கின்றது. | |
| **பிறமொழி பேசும் பெற்றோர்** | |
| கேள்விகள், பிரச்சினைகள், முரண்பாடுகளின் போது பிறமொழி பேசும் பெற்றோர், நடுநிலையான, வெளிநாட்டவருக்கான ஆலோசனைக்கும் இணைந்து வாழ்தலுக்குமான நிபுணத்துவ மையத்தினை (FABIA) நாடலாம். இந்த ஆலோசனை இலவசமானது. | **FABIA Luzern**<br>Fachstelle für die Beratung und Integration von Ausländerinnen und Ausländern<br>Tribschenstrasse 78,<br>6005 Luzern<br>Tel. 041 360 07 22<br>info@fabialuzern.ch<br>www.fabialuzern.ch |